தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 | ஜனவரி 2018 | கனி 2



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

**THE WORD OF CHRIST**



ஆசிரியர்
B. அர்ஜுனன்

---

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2018 at Batlagundu Post office. January 2018




சகோதரி பெட்டி அவர்கள் எழுதிய புத்தகம் வெளியீடு
தேவனிடத்திற்கு செல்லும் வழியை மனிதன் கண்டுபிடிக்க முடியுமா?

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M &
Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M &
Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

**Arjunan in Tamil:**
TV: Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV.
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Radio: Every Saturday 5:30 - 5:45 pm on 31 meter band on Sri Lanka radio.



World Evangelism Gospel Media

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Tamilan TV: Sunday 6:45 - 7:00 am.
Nambikkai TV: Friday 6:00 - 6:30 am.

**Rajanayagam in Tamil:**
Tamilan TV: Monday 7:00-7:15 am
Thursday 9:30-10:00 pm.
Saturday 7:15-7:30 am.

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 209

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. தங்கள் தோளை முரட்டுத்தனமாய் விலக்கி, கேளாதபடிக்குத் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டார்கள் என்று எந்த தீர்க்கனுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானது?
2. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ எவரையும், எவரையும் உடையவனாய் இருக்கிறான்?
3. சத்தியவேதம் எவன் வாயில் இருந்தது?
4. சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று சாட்சி பெற்றவன் யார்?
5. நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார் என்றவன் யார்?
6. நீங்கள் நினையாத நாழிகையிலே எவர் வருவார்?
7. இஸ்ரவேலிலே நியாயம் விசாரிக்கிறவர்கள் வருத்தமான காரியங்களை மாத்திரம் யாரிடம் கொண்டு சென்றார்கள்?
8. இயேசுவானவர் எவனுடைய நாவைத் தொட்டு எப்பத்தா என்றவுடன் செவ்வையாய்ப் பேசினான்?
9. சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் எதற்கு சமானம்?
10. வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும் எதுவும், எதுவும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும் என்றார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**
ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

27

நாள்: 18.01.2018 வியாழக் கிழமை
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: சகோ.மோகன் ராஜ்
2, கிருஷ்ணா நிவாஸ், ரம்யா தெரு
மோதம் ரோடு, மூக்கண்டபள்ளி
ஒசூர் -635 109, கிருஷ்ணகிரி மாவட்டம்
8754962329






சிறுவர் பகுதி

## தன் உயிரைப்போல சிநேகித்த யோனத்தான்

**வேதபகுதி: 1சாமுவேல் 18:1-4**



தாவீதும், யோனத்தானும் நல்ல நண்பர்கள். யோனத்தான் தாவீதை தன் உயிரைப்போலச் சிநேகித்தான். நீங்கள் உங்களுடைய நண்பனை இப்படிச் சிநேகிக்கிறீர்களா? அவர்கள் இருவரும் சிநேகத்திற்கு அடையாளமாக உடன்படிக்கைபண்ணிக்கொண்டார்கள். அது எப்படியென்றால். சவுல் என்கிற ராஜாவுடைய மகனான யோனத்தான் தான் போர்த்துக் கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையும், தன் வஸ்திரத்தையும், தன் பட்டயத்தையும், தன் வில்லையும், தன் கச்சையையும்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான். நீங்கள் என்றாவது உங்களுடைய உடைமைகளை உங்களுடைய நண்பனுக்கு கொடுத்ததுண்டா?

இரண்டு நண்பர்கள் ஒருவரையொருவர் சிநேகிக்கிறார்கள் என்றால் அவர்கள் தங்களுடைய பொருள்களை கொடுத்து அன்பு செலுத்தினார்கள். நீங்களும் உங்களுடைய நண்பனும் அவ்விதமாக ஒருவருக்கொருவர் உடமைகளை கொடுத்து அன்பு கூருகிறீர்களா? யோனத்தானும் தாவீதும் அவ்விதமாக அன்பு கூர்ந்து ஒருவரையொருவர் சிநேகித்தார்கள்.

நம்மை உண்டாக்கின பிதாவாகிய தேவன் ஒரு சிநேகிதனிடத்தில் அன்புகூருவதைப்போல நம்மில் அன்புகூரும்படியாக, நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஒரேபேறான குமாரனையே நமக்காக ஒப்புக்கொடுத்து அன்பு கூர்ந்தார். அந்த தேவனின் மீது உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது.

**மனப்பாட வசனம்**

**நாம் தேவனுடைய கற்பனைகளைக்கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. 1யோவான் 5:3**

### தென் மாவட்ட வாசகர்களுக்கு!

**நீங்கள் சகோதரரை சந்திக்கவும் ஆவிக்குரிய ஆலோசனைகளை பெறவும் விரும்பினால் ஒவ்வொரு மாதமும் 9 மற்றும் 10 தேதிகளில் வத்தலக்குண்டு தி வேர்ட் ஆப் கிரைஸ் அலுவலகத்தில் வந்து சந்திக்கலாம்.**

**ஒருநாள் தங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும். மேலும் இரண்டு நாளும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் வேதாகமத்தை நன்கு கற்றுக்கொள்ளவும் ஒரு அருமையான வாய்ப்பு.**

**மொபைல் மூலமாக தொடர்பு கொண்டு பிறகு வரவும். நன்றி. 9443558041**

### தமிழகத்தின் வட மாவட்ட வாசகர்களுக்கு!

ஒவ்வொரு மாதமும் கடைசி சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில்...

கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம், செல்வம் பேப்பர் ஸ்டோர், 38 மேயர் சிட்டிபாபு தெரு, எல்லிஸ்ரோடு, திருவல்லிகேணி, சென்னை 600 005. 9443558041





# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 18 ஜனவரி -2018 கனி - 2


ஆசிரியருரை

## சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் கடனாளியாயிருக்கிறேன்
## I Am A Debtor To Preach The Gospel




மனிதன் பலவகையில் கடன்பட்டு கடனாளியாகின்றான். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை சுவிசேஷ கடனாளி என்று அழைத்து அறிமுகப்படுத்துகிறார். அவர் எந்தவிதமாக சுவிசேஷத்தினிமித்தம் கடனாளி என்று கூருகிறார். சுவிசேஷத்தினிமித்தம் யாரிடமாவது கடன் வாங்கி கடனாளியானாரா? அல்லது சுவிசேஷத்தை அறிவிக்காதது ஒரு கடனாக இருக்கிறது என்று கூருகிறாரா? என்பது குறித்து இன்று நாம் தியானிக்கவுள்ளோம். அவர் சுவிசேஷத்தினிமித்தமாக யாரிடமும் கடன் வாங்கவில்லை. அநேகர் கர்த்தர் நிமித்தமாக இந்த கடனை நாங்கள் அடைந்தோம் என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் எவரையும் கடனாளியாக்க விரும்பவில்லை. அவர் எண்ணிலடங்கா ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் எந்த ஒரு நபரும் கடன்படவேண்டிய அவசியமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு சொல்லக்கூடிய கடன் சுவிசேஷக் கடன். அவர் அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவித்து வந்திருந்தும். இன்னும் நான் இந்தவிஷயத்தில் கடனாளியாகவே இருக்கிறேன் என்கிறார். இது குறித்து ரோமர்1:14 ல் "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" என்கிறார். கிரேக்கர் எப்படிப் பட்டவர்கள். ஞானத்தைத் தேடக்கூடியவர்கள். ஞானத்தைத் தேடக்கூடியவர்கள் ஞானமாக இருப்பார்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்றால் நமக்கும் ஞானம் அவசியம். அந்த அளவு ஞானமுள்ளவர்களாக இருந்தால்தான் அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கமுடியும். இந்த ஞானவான்களுக்கு போதிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

வேதம் சொல்லுகிறது; "ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?" (1கொரி.1:20). உலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறது. அவர் சர்வவியாபி என அறிகிறோம். ஆனால் ஞானத்தைத் தேடுகிறவர்கள் கொஞ்ச ஞானத்தை பெற்றுக்கொண்டவுடன் தங்களை பெரிய ஞானிகளாகவும் ஞனாவான்களாகவும் எண்ணி மற்றவர்களை அசட்டைபண்ணுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க நாம் அநேக காரியங்களைக்

கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. இயேசுவின் பிறப்பையும், அவருடைய மரணத்தையும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துச்சொல்லவேண்டும். பொதுவாக பள்ளியில் முதலாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு கற்றுக்கொடுப்பது சுலபம். அதே பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கின்ற மாணவனுக்கு கற்றுக்கொடுப்பது சற்று கடினம். ஏனென்றால் அவன் பாடம் சம்பந்தமாக அநேக கேள்விகள் கேட்கக்கூடும். முதலாம் வகுப்பில் உள்ள மாணவனுக்கு நாம் கற்றுக்கொடுப்பதே பாடம் அதை அப்படியே தலையை ஆட்டிக்கொண்டு கேட்பான். ஆனால் பத்தாம் வகுப்பு மாணவன் சற்று தேறியிருப்பதால் அநேக கேள்விகளைக் கேட்பான். அதைப்போல இந்த கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடக்கூடியவர்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் பவுல் இன்னும் கடனாளியாகவே இருப்பதாக சொல்லுகிறார். அப்படியானால் இன்னும் அநேகருக்கு அவர் சொல்லவேண்டிய வராயிருக்கிறார் என்று அறிகிறோம். நாமும் நம்மைச்சுற்றியுள்ள மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் கடனாளிகளாகவே இருக்கிறோம்.

மேலும், பவுல் அந்நியர்களுக்கும் கடனாளி என்கிறார். அந்நியர்கள் என்று நாம் பார்க்கும்போது, தேவனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எல்லோருமே அந்நியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய விருப்பப்படி தேவனை ஆராதிக்கக்கூடியவர்கள் அவர்களுக்கும் உன்னதமான சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். இது ஆண்டவருடைய கட்டளையாயிருக்கிறது. ஆகையால், சீஷர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். ஒரு முறை யூதர்கள் மத்தியில் பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்யும்போது; யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள். "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்றார்கள் (அப்.13:46). இப்படி சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்த யூதர்களை விட்டு புறதேசங்களுக்கும் கடந்துசென்று சுவிசேஷத்தை அறிவித்தார்கள். மேலும் "நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை புறஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்" (அப்.13:47). சுவிசேஷத்தை அறிவிப்பதில் பவுல் வெட்கப்படாத ஒரு கிறிஸ்தவனாக இருந்து அறிவித்துக்கொண்டுவந்தார். அது என்மேல் விழுந்த கடமையாக இருக்கிறதென்றும், அதற்கு நான் கடனாளி என்றும் சொல்லிக்கொண்டார். இந்த சுவிசேஷத்தைக்குறித்து நீ என்ன நினைக்கிறாய்? இது உலகமுழுமைக்கும் அறிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் இரட்சிப்பின் சுவிசேஷ நற்செய்தியாகும். இந்த சுவிசேஷ நற்செய்தியை அசட்டைபண்ணாமல் அதற்கு கீழ்ப்படிவாயானால் அது உன்னை இரட்சிக்கும். உன் குடும்பத்திற்கும் அது இரட்சிப்பைக் கொண்டுவரும். இந்த சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் இதை அறிவிப்பதில் கடனாளிகளாகவே இருக்கிறோம். நலமான காரியம் ஒன்று நம்நாட்டில் நடக்கிறது என்றால் அதை அப்படியே மறைத்து வைப்போமா? உடனே எல்லோருக்கும் அதை அறிவிப்போம் அல்லவா? அதைக் காட்டிலும் மேலானது இந்த சுவிசேஷம். உலகத்தில் உள்ள எல்லா நற்செய்திகளும்



மனந்திரும்புதல் நம்மிலே மூன்று வித பார்வையை ஈடுபடுத்துவது.

1. அறிவுக் கூர்மை சார்ந்தது. மன மாற்றம் பாவத்தில் தனிப்பட்ட குற்ற உணர்வு, அசுத்தமாக்கபடுதல் மற்றும் உதவியற்றநிலை பாவத்தால் வந்ததென்று அடையாளம் காண்பது. ஒரே சமயம் பவுல் தான் செய்தது சரியென்று எண்ணினார். இயேசுவானவர் அவரில் பிரவேசித்த பின்பு அவருடைய சிந்தனை மாறிற்று.

2. உணர்வு பூர்வமானது உணர்வில் மாற்றம் தேவனை நேசி பாவத்திற்கு பதிலாக பூமியிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள் (கொலோ.3:1,2) மேலானவைகளையே தேடுங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனில் பிதாவின் அன்பு இல்லை (1யோவா.2;15).

3. சித்தத்தின்படி நோக்கத்தில் மாற்றம் பாவத்திலிருந்து உள்ளான மனதில் மாற்றம், அதோடு பாவமன்னிப்பையும், கழுவப்படுவதையும் இயற்கையாக விரும்புதல். அது நாம் செய்யும் தீர்மானம். இனி பாவத்துடன் நமக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. மனமாற்றமென்பது முற்றிலும் சரணடையச் செய்வது, தேவ சித்தத்துக்கு தன்னை பூரணமாக அர்ப்பணிப்பது. (கிட்டெல்) ஒரு பிரசங்கியார் யோசனையாக சொன்னார: மனந்திரும்புதல் என்பதை சரியான ஒரே வார்த்தையில் சுருக்கிச் சொன்னார் அது சரணடைதல் என்று.

அது மனந்திரும்புதலை மிகவும் கடினமானதாக்குகிறது. ஒப்புக்கொடுக்கிறோம்.






**இப்புத்தகத்தைப் பெற்றுக்கொள்ள**
**மணியாடர் மூலம் ரூ100/-**
**அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்**

**The Word of Christ**
**D/5 Rajan Nagar**
**Batlagundu -624 202 South India**
**94435 58041**



JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW

Contact:
94435 58041


**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் யோவான்12:26**

## பாடம் -26

## வேதாகமத்தின்படியான மனந்திரும்புதல் என்றால் என்ன? - *Jerry Bates*

### What Is Bible Repentance?

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




**எது மனந்திரும்புதலில்லை?**

னமந்திரும்புதலென்பது ஏதோ நம்முடைய பாவங்களுக்காக வருத்தப்படுவது மட்டுமல்ல, அது ஒரு அவசியமான நிபந்தனை ஆனால் அதுவே மனந்திரும்புதலில்லை.

எடுத்துக்காட்டாக மத்தேயு 27;3ல் யூதாஸ் மனந்திரும்பியதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாக தீர்க் கப்பட்டதை கண்டு மனஸ்தாபப்பட்டு அந்த முப்பது வெள்ளிக்காசை பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து கொடுத்தான். அப்.2:38ல் மனந்திரும்புதலுக்கு வித்தியாசமான வார்த்தையுள்ளது. சலோமிக்கு எதை வேண்டுமென்றாலும் கொடுப்பேன் என்று வாக்களித்ததைக் குறித்து ஏரோது வருந்தினான். ஆனாலும் யோவானை சிரச்சேதம் செய்தான்.

3. பின்பு தேவனுக்கேற்ற துக்கம் மனஸ்தாபப்படுகிறதுக்கு ஏதுவில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது (2கொரி.7:10). தேவனுக்குகேற்ற துக்கமென்பது தாழ்மையான இருதயத்தில் தேவனுக்கு துக்கமுண்டாக்கி விட்டோமென்று தன் பாவங்களை உணர்வதாகும்.

நலமானதைச் செய்யவேண்டும் என்ற தீர்மானம் மட்டுமல்ல, முன்னதாக அது நிகழ்ந்து மனந்திரும்புதலுக்கு காரணமாகிறது. (எ.க) புது வருட தீர்மானங்கள். மனிதத்தீர்மானங்கள் எளிதாக உடைக்கப்படுகின்றன.

பாவத்தை மூடுவதில்லை (2சாமு.11 தாவீது பத்சேபாள்)

பாவத்தைக் குறித்த மனப்பூர்வமான துக்கமில்லை.

1. தேவை பாவி தான் (பாவத்தில்) இழந்துபோன நிலையை நன்கு உணரவேண்டும்.

2. பேதுரு மக்களை தங்கள் பாவத்தை உறுதியாக உணரவைத்தார் (அப்.2:37,38). ஒருவருடைய பாவநிவிர்த்திக்காக செய்யப்படுவது உண்மையான மனந்திரும்புதல். மறுபடியும் முன்னிருந்த நிலையில் செயல்படக்காரணமாகும்.

பார்வோன் அறிக்கை செய்தான். ஆனாலும் இஸ்ரவேலை அடிமைத்தனத்தில் நிறுத்திவைத்தான்.

பாவம் செய்வதை விட்டுவிடுவது மட்டுமல்ல (எ.டு) குடும்பப் பிரச்சனை, வேலையில் அல்லது சங்கடமான நிலை காரணமாக குடிப்பதை விட்டுவிடுவது,அனுமதிக்கப்பட்ட பாலுறவை எய்ட்ஸ்போன்ற மற்ற வியாதிகளின் பயத்தால் விட்டுவிடுவது, சில பிள்ளைகள் விளைவுகளின் பயத்தால் தன் நடத்தையே மாற்றுகின்றனர். அது உண்மையான மாற்றமல்ல.

மன மாற்றம் என்றால் என்ன?

தேயர் என்ற வேத அறிஞர் இவ்விதமாக விவரிக்கிறார். ஒருவருடைய மனதை மேன்மைக்கு ஏதுவாக மாற்றிக் கொண்டு மனப்பூர்வமாக கடந்த கால பாவங்களை வெறுத்து மனப்பூர்வமாய் மாற்றங்களை செய்துகொள்வது மனந்திரும்புதல் என்பது வாழ்க்கை மாற்றதுக்கு நடத்திச் செல்லும் சிந்தனை மாற்றம். யோவான்ஸ்நானகன் சொன்னார்: ஆனபடியால் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் (மத்.3:8).



உலகத்திற்குரியவைகளே, ஆனால் கர்த்தருடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தி உன்னதத்திற்கு கொண்டு செல்லக்கூடியது. ஆகையால் இது உலகத்திற்கும் மேற்பட்ட ஒரு உன்னதமான செய்தியாகும். இந்த சுவிசேஷத்தை பாதரட்சைகளைப்போல உங்கள் கால்களில் தொடுத்துக்கொண்டு நீங்கள் செல்லும் இடமெங்கும் இச்செய்தியை அறிவிக்கவேண்டும். இப்பணி ஒரு உன்னதமான பணியாக இருக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என வேதம் சொல்லுகிறது.

மேலும், பவுல் ஞானிகளுக்கும் கடனாளி என்கிறார். ஞானவான்களுக்கு உபதேசம் பண்ணுவது சற்று கடினமான காரியம் தான். அவர்கள் உலக ஞானத்தைப் பெற்று இருக்கிறார்கள். வேதம் "ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது" (1கொரி.1:19). நாம் முன்னமே படித்தபடியாக தேவனுடைய பார்வையில் ஞானம் என்பது பைத்தியமாயிருக்கிறது. ஞானமாக செய்துவிட்டோம் என்று அநேகர் நினைப்பார்கள். ஆனால் அந்த ஞானம் சிலகாலங்களுக்குப்பின் ஒன்றுமில்லாதுபோகிறது. இதை நம்முடைய கண்களால் காணமுடிகிறது. நம்முடைய முற்பிதாக்களுடைய அரண்மனைகளை நோக்கிப்பாருங்கள். அந்த நாட்களில் அவைகள் எவ்வளவு கெம்பீரமாக கட்டப்பட்டிருக்கும். ஆனால் அவைகளின் தற்போதைய நிலைமையை எண்ணிப்பார்க்கும்போது ஒன்றுமில்லாமற்போகிறது. அதேவேளையில் தேவனுடைய சிருஷ்டிப்புகளில் ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுப்பாருங்கள். அவைகள் மாறாதவைகளாகவும் அழியாதவைகளாகவும் இருக்கிறது. அன்றுமுதல் இன்றுவரை சந்திரன் நிலைத்திருக்கிறது, சூரியன் ஒளியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும் பவுல் குறிப்பிடும்போது; "இயேசுகிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதிமுடிக்கிறார் (ரோம.16:26,27). இப்படி எண்ணிலடங்கா காரியங்களை தேவன் ஞானமாய் சிருஷ்டித்திருக்கிறார். அவருடைய ஞானத்திற்கு முன்பாக மனித ஞானம் எம்மாத்திரம். ஞானத்தை நம்பிக்கொண்டிருக்கிற ஞானிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். அந்த ஞானத்திலே அவர்கள் கெட்டுப்போய்விடக்கூடாது. ஆகையால் ஞானிகளுக்கும் நான் கடனாளி என்கிறார்.

கடைசியாக மூடருக்கும் நான் கடனாளி என்கிறார். மூடர் தேவனுடைய காரியங்களை அசட்டைபண்ணுகிறவர்கள். ஆனால் அவர்களுக்கும் சுவிசேஷம் சொல்லப்பட வேண்டும். அவனோ மூடன், அவனுக்கு சுவிசேஷத்தை அறிவித்தால் அதை அவன் கேட்பானா? அதை அசட்டைபண்ணுவான். பின்பு அவனுக்கு இரட்சிப்பு உண்டாவது எப்படி? ஆகையால் அப்படிப்பட்டவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கும்படி தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. ஆகையால் எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். ஆனால் நீதிமொழிகள் மூடரைக்குறித்து என்ன சொல்லுகிறது? "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்" (நீதி.1:7). இப்படி போதகத்தை அசட்டைபண்ணுகிற மூடனுக்கு நான் கடனாளியாயிருக்கிறேன் என்றார் பவுல். சுவிசேஷத்தை கேட்பவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதில்

எத்தனையோ இடற்பாடுகளை சந்திக்கிறோம். அசட்டைபண்ணுகிறவர்களுக்கு எப்படி அறிவிக்கமுடியும்? ஆனால் அவர்களுக்கும் சுவிசேஷம் சென்றடையவேண்டும். குழந்தைகள் சாப்பிடுவதற்கு அடம்பிடிக்கின்றனர். அதற்காக குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுக்காமல் விட்டுவிடுகிறார்களா? இல்லையே, எப்படியாவது சில விளையாட்டுக்காரியங்களை காண்பித்தும், சில காட்சிகளைக் காண்பித்தும் அந்த குழந்தைக்கு சாப்பாடு கொடுக்கிறார்கள். ஏன் அந்த குழந்தைகள் வளர்ச்சியடையவேண்டும். நோய் இல்லாமல் காக்கப்படவேண்டும். நன்கு வளர்ச்சியடையந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் நற்பெயர் பெற்றுத்தரவேண்டும். எப்படி எத்தனையோ காரியங்களை வைத்து அக்குழந்தையை வளர்க்கிறார்கள். அதில் அதிகமான கஷ்டங்கள் இருக்கிறது. அதற்காக குழந்தைகளை யாரும் வளர்க்காமல் இல்லை. அதைப்போல மூடருக்கு சுவிசேஷம் அறிவிப்பது கடினமான ஒன்றுதான். அதற்காக அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்காமல் இருந்துவிடமுடியாது. அவர்களும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் தான். அவர்களுக்கும் ஒரு ஆத்துமா இருக்கிறது. அவர்களுடைய சூழ்நிலைகளை புரிந்துகொண்டு அவர்களுக்கும் நாம் சுவிசேஷம் சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். பவுல் ஒரு முறை ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் எங்களை பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தபடியால். பவுல் சினங்கொண்டு திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று. இதனால் அவர்களை "அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்" (அப்.16:21,22). இப்படிப்பட்ட மூடப்பழக்கவழக்கங்களை கொண்டிருந்த அநேக இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அப்போஸ்தலர்கள் அறிவித்து அதினால் அநேக பாடுகளை அநுபவித்தனர்.

**பவுலுடைய உறுதியான தீர்மானம் என்ன?**

சுவிசேஷத்தை அறிவிப்பதை தன்னுடைய உயிர் மூச்சாக கொண்டிருந்தார். "ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்" என்றார் (ரோம.1:15). சுவிசேஷத்தை அறிவிப்பதிலே சோர்வுக்கோ, இயலாமைக்கோ இடமில்லை. அது தன்மேல் விழுந்த கடமையாகவே பவுல் எண்ணினார். ஆசியா முழுமைக்கும் சுவிசேஷத்தை முதல் நூற்றாண்டு காலத்தில் அறிவித்த ஒரு மாபெரும் உன்னதான அப்போஸ்தலன். இவரைப்போல இன்று ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் தன்னை கடனாளி என்று சொல்லிக்கொள்ளவேண்டும். சுவிசேஷம் அறிவிக்கபட வேண்டிய ஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். பல மொழிபேசுகிறவர்களும், பல இனத்தவர்களும், பலவிதமான பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களும் நாம் வாழும் இந்தப்பூமியில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சுவிசேஷம் சென்றடையவேண்டும்.



**வேத அறிவுப்போட்டி எண் 206-ல் வெற்றிபெற்றவர்**

17. Mrs.நிர்மலா வின்செண்ட் - திருப்பூர்
18. Mrs.ரூபவல்யா - நாசரேத்
19. E.அதிசயம் - பனைகுடி
20. K.ரத்தினாபாய்பிரசாத் - மதுரை
21. Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
22. Mrs.ஞானம்பிலிப் - கோவை
23. Mrs.எபிநேசர் - கடலூர்
24. ரூபிஜெயசேகர் - கலுங்குவிளை
25. A.ஆலிஸ்ஞானசீலி - தூத்துக்குடி
26. Mrs.பாக்கியத்தாய்செல்வராஜ் - தூத்துக்குடி
27. Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
28. D.தேவபுஷ்பம் - தூத்துக்குடி
29. Mrs.ஃபிராங்களினாஜான் - ஊட்டி
30. Mrs.அல்லிராணிகாட்வின் - சென்னை
31. Mrs.ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
32. Mrs.ஜாய்மேத்யு - வி.கே.புரம்
33. J.விக்டர்சூரியமூர்த்தி - தூத்துக்குடி
34. M.ராமச்சந்திரன் - தூத்துக்குடி
35. R.கஸ்தூரி - தூத்துக்குடி
36. Mrs.பிரமிளாரேவதி - கோவை
37. D.சாந்தாதேவி - தேனி
38. S.ஜாய் சந்திரகாந்தா - நெல்லூர்
39. Mrs.பாலின்டேனியேல் - சென்னை
40. Mrs.கமலவேணி - சென்னை
41. Mrs.கிரேஸ்டெல்லாபக்தர் - சென்னை
42. S.சீமோன் - திருநெல்வேலி
43. A.K.ஜெயா - கன்னியாகுமரி
44. Mrs.ஜெஸிமேபிள் - கடலூர்
45. K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
46. Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
47. S.சாந்தகுமாரி - நாசரேத்
48. Mrs.புஸ்பாசோபனம் - கன்னியாகுமரி
49. S.R.பெரியசாமி - நாமக்கல்
50. Mrs.சாந்தாபழனி - தருமபுரி
51. N.ஜெபத்தாய் - நாசரேத்
52. B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
53. G.T.கிரகாம் - சென்னை
54. Mrs.சிப்போராள் மோசஸ் - திருச்சி
55. E.செல்வன் - திருநெல்வேலி
56. S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
57. Mrs.ரவி சங்கீதா - தூத்துக்குடி
58. G.பூங்கோதை - கோபி
59. Mrs.சுசிலா ராஜசிங் - திருநெல்வேலி
60. A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை

உமது பிரமாணங்களில்
மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்;
உமது வசனத்தை மறவேன்
சங்கீதம் 119:16



71. Sis.தேவிராஜசிங் - திருப்பூர்
72. N.A.அருள் செல்வராஜ் - திருநெல்வேலி

**வேத அறிவுப்போட்டி எண் 207-ல் வெற்றிபெற்றவர்**

17. M.செம்புலிங்கம் அன்னம்மாள் - தூத்துக்குடி
18. J.ஆலிவ் - கோவை
19. Mrs.நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
20. P.சந்திராடேனியேல் - திருநெல்வேலி
21. R.அந்தோனியம்மாள் - கலுங்குவிளை
22. Mrs.பாலின்மார்ட்டின் - சிவகங்கை
23. Sis.தேவதாதேவபிரியம் - சென்னை
24. Mrs.ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
25. Mrs.சரோஜினிராஜ்பால் - திருநெல்வேலி
26. Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
27. S.சாந்தாகுமாரி - நாசரேத்
28. Mrs.சொர்ணமணிதாமஸ் - தூத்துக்குடி
29. Mrs.மேரிநிர்மலா - மதுரை
30. Mrs.ஃபிராங்களினாஜான் - ஊட்டி
31. G.நிர்மலாவின்செண்ட் - திருப்பூர்
32. Mrs.ஃபுளோராசுந்தர் - மதுரை
33. T.ஏஞ்சலின் நேசமலர் - கன்னியாகுமரி
34. K.S.மாணிக்க வாசகம் - திருச்சி
35. Mrs.கிறிஸ்டோபல் - கோவை
36. R.ஜெபகனி - விருதுநகர்
37. S.பிரமிளாரேவதி - கோவை
38. A.ஆலிஸ்ஞானசீலி - தூத்துக்குடி
39. Sis.அல்லிராணிகாட்வின் - சென்னை
40. Mrs.ஜெயராணி - கடலூர்
41. Mrs.கெத்சிசெல்வின் - சென்னை
42. Mrs.கிரேஸ் சங்கீதா - தூத்துக்குடி
43. Mrs.கமலவேணி - சென்னை
44. J.செல்வராஜ் - தூத்துக்குடி
45. S.தங்கம் - கன்னியாகுமரி
46. M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
47. Mrs.இளவரசி - கோவை
48. D.தேவபுஷ்பம் - தூத்துக்குடி
49. S.A.சாமுவேல் - நாமக்கல்
50. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
51. Mrs.ஞானமரகதவள்ளி - திருநெல்வேலி
52. Mrs.ஜெபக்கனி - திருநெல்வேலி
53. Mrs.ரூபவல்யா - தூத்துக்குடி
54. S.R.பெரியசாமி - நாமக்கல்
55. Mr.விக்டர்சுவிசேஷமுத்து -தூத்துக்குடி
56. S.ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
57. Mrs.வசந்தாரபீந்தரன் - தூத்துக்குடி
58. G.பூங்கோதை - கோபி
59. M.சிப்போராள் மோசஸ் - திருச்சி
60. N.ஜெபத்தாய் - நாசரேத்
61. Mrs.இந்திராஜெபக்கனி - நாசரேத்
62. Mrs.சுசீலா ராஜசிங் - திருநெல்வேலி
63. Miss.D.சாந்தாதேவி - தேனி
64. Mrs.புஷ்பாசோபனம் - கன்னியாகுமரி
65. Mrs.ஞானம்பிலிப் - கோவை
66. Mrs.ஜோதிமணிஅப்பாதுரை - விருதுநகர்
67. Mrs.ரூக்மணிஜெசீலன் - தேனி
68. B.ஸ்டெல்லாம்மா - கூத்தூர்
69. Mrs.ஃபுளோரா எழில் - ஆம்பூர்
70. Mrs.கெத்சிசெல்வின் - சென்னை

புத்தியீனனே நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல் கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய் அதற்குத் தேவன் தமது சித்ததின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்"

"மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக் கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக் குரிய சரீரம் எழுந்திருக்கும். ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.

"சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில்; மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:19,20; 35-38; 42-44; 50-52).

**வேத அறிவுப்போட்டி**
**எண் 206-ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. என் வசனத்திற்கு | - ஏசா.32:9 |
| 2. ஆம் | - கலா.4:23 |
| 3. மெய் | - எரே.3:20 |
| 4. இயேசுகிறிஸ்வின்மேல் | - எபே.2:21 |
| 5. பஞ்சத்தை, நாசம்பண்ணுவேன் | - எசே.14:13 |
| 6. ஆம் | - பிலி.2:2 |
| 7. எசேக்கியேல் | - எசே.34:14 |
| 8. கிறிஸ்துவுக்குள் | - கொலோ.1:14 |
| 9. புஸ்தகங்கள் | - தானி.7:10 |
| 10. பவுல் | - 1தெச.3:7 |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 207-ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. ஓசியா | - ஓசி.4:16 |
| 2. பவுல் | - 2தெச.3:12 |
| 3. பெத்துவேலின்குமாரன் | - யோவே.1:1 |
| 4. தீமோத்தேயு | - 1தீமோ.5:23 |
| 5. துறடுகளாலும் | - ஆமோ.4;2 |
| 6. நிலைத்திருக்கிறது | - 2தீமோ.2:19 |
| 7. ஏசா | - ஒபதி.1:10 |
| 8. பவுல்,தீத்து | - தீத்து3;15 |
| 9. நினிவேயின் ராஜா | - யோனா.3:9 |
| 10. பிலேமோனுக்கு | - பிலே.1:15 |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 206-ல் வெற்றிபெற்றவர்**

| | |
|---|---|
| 1. Mrs.ஜெமிநல்லையா | - மதுரை |
| 2. Mrs.ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 3. B.ஞானதீபராஜ் | - திருநெல்வேலி |
| 4. Mrs.பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 5. R.அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 6. Mrs.அன்புகமலம் | - காரைக்குடி |
| 7. P.சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 8. K.ராணி | - தூத்துக்குடி |
| 9. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 10. Tmt.மரகதம்திரவியம் | - கோம்பை |
| 11. T.ராஜாத்தி | - கோம்பை |
| 12. S.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 13. R.ஜெபக்கனி | - கூமாபட்டி |
| 14. Mrs.ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 15. J.செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 16. S.லதாசூரியமூர்த்தி | - தேனி |

**வேத அறிவுப்போட்டி**
**எண் 207-ல் வெற்றிபெற்றவர்**

| | |
|---|---|
| 1. S.ஜாய் சந்திரகாந்தா | - நல்லூர் |
| 2. Mrs.ஜெபாநியூட்டன | - திருநெல்வேலி |
| 3. Mrs.கிரேஸ்டெல்லா பக்தர் | - சென்னை |
| 4. Mrs.ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 5. Mrs.ரூத்ஜெயராணிஅன்புராஜ் | - திருநெல்வேலி |
| 6. B.ஞானதீபஜெயராஜ் | - திருநெல்வேலி |
| 7. Sis.ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 8. Mrs.ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 9. E.அதிசயம் | - விருதுநகர் |
| 10. Mrs.அன்புக்கமலம் | - சிவகங்கை |
| 11. Mrs.ஜெமிநல்லய்யா | - மதுரை |
| 12. Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 13. A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 14. Tmt.மரகதம்திரவியம் | - கோம்பை |
| 15. K.ராணி | - தூத்துக்குடி |
| 16. T.ராஜாத்தி | - கோம்பை |



கர்த்தருடைய கட்டளையை நாம் ஒவ்வொருநாளும் நிறைவேற்ற பாடுபடவேண்டும். உலகத்தில் பலவிதமான காரியங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் கடனாளிகளாக இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுலைப்போல சுவிசேஷ கடனாளிகளாக உங்களை நியமித்துக்கொள்ளுங்கள். மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள். கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

- **தமிழகத்தில் பத்திரங்களை 'ஆன்லைன்' மூலம் பதிவு செய்யும் முறை 578 சார் – பதிவாளர் அலுவலகங்களிலும் அமலுக்கு வந்துள்ளது.**
- **இதுவரை நான்கு லட்சம்பேர் சரியான விபரங்களை தராமல் இருப்பதால் அவற்றை போலி கார்டுகளின் பட்டியலில் சேர்க்க, உணவு துறை முடிவு செய்துள்ளது.**
- **1964 டிச.,22ல் வங்ககடலில் ஏற்பட்ட புயலினால் சேதமான தனுஷ்கோடியின் புணரமைபுக்கு ரூ 1.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

நடப்புச் செய்திகள்

**நம்பிக்கை TV சேனலில்**
**சனிக்கிழமை**
**மாலை 8.00 மணி மற்றும்**
**தமிழன் TV ல் வியாழக் கிழமை**
**மாலை 6.00 மணிமுதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

தெரிந்து கொள்வோம்


## தயிர் – சில சுவையான செய்திகள்


K.R.K.Ravi Asir

- தயிரில் சுண்ணாம்புச் சத்து நிறைய இருக்கிறது என மருத்துவ ஆய்வு கூறுகிறது.
- பண்டைய காலத்தில் தலைமுடி வளருவதற்கு தயிர் தேய்ப்பார்கள்.
- தயிர் ரோமத்தை தூய்மைப்படுத்துகிறது. முடியை அடர்த்தியாக வளரச் செய்கிறது.
- தயிர் மேனி அழகைப் பொலிவு செய்யும் தன்மை வாய்ந்தது மொகலாய அரசிகள் தங்கள் மேனியை மெருகூட்ட தயிர்பூசி, சூரிய வெளிச்சத்தில் அமர்ந்து இன்னிசை கேட்டு மகிழ்வார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் வெளிநாட்டு யாத்திரீகர்கள்.
- தயிர் முகப்பருவை அகற்றுகிறது. பாசிப்பயறு மாவுடன் தயிரைக் கலந்து பூசினால் முகம் இ ள மை பெறும்.
- அழகுக்கலை நிபுணர்கள் நிறைந்த சிகாகோ நகரில் தயிர் ஒரு அழகுசாதனப் பொருளாக பயன்படுத்தப்படுகிறது
- ஆப்பிரிக்கா மலை ஜாதியினர் தயிர் அதிகம் சாப்பிடுவதால் அவர்களுக்கு ஹார்ட் அட்டாக் வருவதில்லை என்று ஒரு சர்வே வெளிப்படுத்தியது.

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**







# பொழுது போக்கு – Entertainment

J.C.Choate



இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்தி, உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த சமயத்திற்கான நம்முடைய பாடமானது பொழுது போக்கை பற்றியதாக இருக்கும். வேதாகமம் மாம்ச மனிதனை கெட்டதும், தவறானதுமான மாம்சத்திற்குரிய காரியங்களையும், பழைய மனிதனாக இருக்கையில் நம்மை பாவம் நிறைந்த மனிதனாகவும் விவரிக்கிறது. இயற்கையில் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிவதில் நாம் பழைய மனிதனை களைந்துபோட்டு அல்லது நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு நாம் இரட்சிக்கப்படும்படிக்கு தேவனுக்கு கீழ்ப்படிந்து இப்படியாக புதிய மனிதனாக கிறிஸ்துவோடுகூட அறையப்பட்டு அல்லது கிறிஸ்துவோடுகூட மரிப்பதைக்குறித்துச் சொல்லுகிறது ரோமர் 6:6. அதற்கு பின்பு "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17).

இப்பொழுது எல்லா காரியத்திலும் பொழுதுபோக்கு என்ன செய்துகொண்டிருக்கிறதாய் இருக்கிறது. ஒன்றுமில்லை. அதாவது நம்முடைய வாழ்க்கைக்கு பல வழிகள் உண்டு என்பதை உணர்த்துகிறது. நாம் வேலை செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம், நாம் குடும்பங்களைக் கொண்டிருக்கிறோம், நாம் நண்பர்களைக் கொண்டிருக்கிறோம், நாம் கல்வியை அல்லது அவ்வப்போது விடுமுறை நாட்களைக் கொண்டிருக்கிறோம். சில நேரங்களை கழிக்கவும், இப்பொழுது இருக்கிற வாழ்க்கையிலிருந்து ஒரு இளைப்பாறுதலைப் பெறவும் ஒரு மாற்றம் நமக்குத் தேவை என நாம் இந்த நேரங்களை ஏற்படுத்திக்கொள்கிறோம். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் வழக்கமான நம்முடைய செயல்களில் மாற்றத்தை விரும்புகிறோம். மேலும் அப்பேர்பட்ட மேற்கூறிய கேளிக்கைகளையும் அல்லது காரியங்களையும் நாம் அனுபவிக்கிறோம். இதில் தவறு ஒன்றுமே இல்லை. ஒருவர் இதனால் மனதளவில் கவரப்பட்டு அவருடைய நன்மைக்கென்று முழுவதும் வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைக்கிறதென்றும் நினைக்கிறார். உண்மையிலே இது ஒருவருடைய ஆர்வம். இது ஒருவருடைய வாழ்க்கையை காப்பாற்றவும் கூடும். மேலும் கண்டிப்பாக சோர்வான வாழ்க்கைக்குள்ளாகவும் கொண்டு செல்லவும்கூடும்.

ஒவ்வொன்றிலும் நல்ல பொழுதுபோக்கும் கெட்ட பொழுதுபோக்கும் இருக்கிறது. இத்தோடுகூட இது உண்மையிலேயே வழக்கமான செயலில் அதிகமானோர் எது கெட்டதோ அதை தெரிந்துகொண்டு நல்ல கேள்வியை எழுப்புகின்றனர்.

நல்ல சினிமா பார்ப்பதில் ஒன்றும் தவறில்லை, ஆனால் இன்றைய நாட்களில் அவைகள் அவமானம் நிறைந்ததாகவும், பலாத்காரமுடையதாகவும்



**வேதாகமத்தின் நோக்கம்**

வேதாகமத்தின் முழு நோக்கம் என்னவென்றால் முக்கியமான ஜீவியத்துக்கென்று மனுஷனை ஆயத்தப்படுத்துவதுதான்: மரணத்துக்குப்பின்னுள்ள ஜீவியம். அப்படியொரு ஜீவியம் இல்லை என்றால், பின் தேவனை பிரியப்படுத்தும்படி செய்கிற எல்லா கிரியைகளும் வீணானதாகவும், மதியீனமானதாகவும் இருக்கும்.

**சில மார்க்கங்கள் போதிக்கிறபடி ஒரு மனுஷன் அநேக ஜீவியங்களில் ஜீவிப்பானேயாகில்,** அவன் வாழ்கிற ஒரு ஜீவியத்தின் முடிவிலே ஒரு முறை நியாயந்தீர்க்கப்படுகிறதில்லை என்றால் உலகத்தின் கவலைகளிலிருந்து ஓய்வு பெற பிரயாசப்படுகிறதென்பது எந்த அளவுக்கு நம்பிக்கை அற்றதாக இருக்கும். மற்றவர்கள் **"உத்தரிப்பு ஸ்தலம்"** என்னும் உபதேசத்தில் நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். அது என்ன சொல்லுகிறதென்றால்; "ஆத்துமா அதனுடைய தீய செய்கைகளுக்காக கொஞ்ச காலம் பாடநுபவிக்கும் ஆனால் அந்த குடும்பமோ, சிநேகிதர்களோ அந்தநபர் உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து வெளியேறத்தக்கதாக சபைக்கு பணம் கொடுத்து ஜெபிக்க முடியும் என்று சொல்லுகிறது.

ஆனால் தேவனால் கொடுக்கப்பட்ட புஸ்தகத்தில் இந்த உபதேசங்கள் காணப்படுகிறதில்லை. அதனுடைய சத்தியத்தின்படி மனுஷன் **ஒருமுறை ஜீவிக்கிறான், ஒரேதரம் மரிக்கிறான்,** பின்பு அவன் உயிர்த்தெழுதலுக்காகவும். இந்த ஜீவியத்தில் அவனவன் செய்த கிரியைகளுக்குத் தக்க நியாயத்தீர்ப்புக்காகவும் காத்திருக்கிறான்.

கிறிஸ்தவத்தின் முழுமையானது இந்த உயிர்த்தெழுதலின்மேல் நம்பிக்கை கொண்டிருக்கிறது. நம்முடைய இரட்சகராக இருப்பதற்கு கிறிஸ்து நமக்காக மரித்தார். ஆனால் ஒரு மரித்துப்போன மனுஷனால் எவர் ஒருவருக்கும் எதுவும் செய்ய முடியாது. **கிறிஸ்துவின் வல்லமையானது, அவர் நம்முடைய உயிர்த்தெழுந்த இரட்சகராகும்படியாக மரணத்தின் கட்டுகளை மேற்கொண்டார் என்ற உண்மையில் அமைந்திருக்கிறது.**

கிறிஸ்துவானவர் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார் என்று வேதாகமம் சொல்லுகிற பொழுது இருபது நூற்றாண்டுகளாக வேதாகமம் உண்மையானது அல்ல என்று நிரூபிக்கத்தக்கதாக அவிசுவாசிகள் முயற்சித்திருக்கிறார்கள் ஆனால் முதலாம் நூற்றாண்டில் உயிர்த்தெழுலுக்குப்பின் அவரை கண்டவர்களுடைய இருதயங்களில் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தை அவிசுவாசிகளால் அசைக்க முடியாமற்போனது. மேலும் அவர்களால் அந்த கண்கண்ட சாட்சியை பொய்யென நிரூபிக்க ஒருபோதும் இயலவில்லை. எது சத்தியம் என்பதை **அறிந்த** அந்த மனுஷர்கள் மரித்தார்கள். மரித்த அவர்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஒருநாளிலே அவரை பின்பற்றிய அனைவரையும் உயிரோடெழுப்ப மீண்டும் வருவார் என்று வாக்குப்பண்ணினதை **அறிந்திருந்தவர்களாக** அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.

"இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர் களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்....

"ஆகிலும் மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடு வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில்,

பெண்கள் பகுதி

## பாடம் -14

## மரணத்திற்கு பின், என்ன?




**After Death, What?** -சென்ற மாத இதழின் தொடர்ச்சி -*Betty*

**ஒ**ரு மனுஷனுக்கு மரண தருவாயில் என்ன நேரிடும் என்று ஒவ்வொரு மார்க்கமும் ஏதோ அந்த மார்க்கத்தை தோற்றுவித்தவர் என்ன நம்புகிறாரோ அதை ஏதோ ஒரு காட்சியாக சித்திரிக்கிறது. ஆனால் எந்த மனுஷனும் மரணம் அடைந்து திரும்ப வந்து, கல்லறைக்கு அப்பால் கடந்து என்ன இருக்கிறது என்று சொல்லவில்லை.

நம்முடைய பாடத்தில் நாம் மெய்யான தேவனை தேடி கண்டுபிடித்திருக்கிறோம். வேதாகமத்தில் சத்தியத்திற்கு எதிராக கேள்வி கேட்க முடியாதவகையில் தேவனே அதை உருவாக்கியவர் என்பதற்குரிய உள்ளான நிரூபணங்கள் அடங்கியிருக்கின்றன. புதிய ஏற்பாடானது கிறிஸ்தவ யுகத்தில் ஜீவிக்கும் ஜனங்களுக்கான தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆகையால் வேதாகமத்தில் மரணத்துக்கு பின் ஜீவன் என்ற தலைப்பில் தேவன் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறாரோ, அவை அனைத்தும் சத்தியமானதாக இருக்கிறது. இந்த சத்தியத்தை அசட்டை செய்யவோ இதற்கு எதிராக கேள்வி கேட்கவோ முடியாது, ஏனென்றால் எந்த மனுஷனும் அந்த ஆவிக்குரிய உலகத்தை குறித்து சுய அறிவுடையவனாக இருக்கிறதில்லை.

நாம் எந்த ஒரு காரியத்தை விசுவாசித்தாலும் அது நாம் அறிந்திருக்கிற மார்க்கங்களின் உபதேசங்களை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும். **நாம் இதை கவனமாக படிக்கும்பொழுது, நாம் மெய்யான தேவனையும், மெய்யான மார்க்கத்தையும் தேடி கண்டுபிடிக்கிறோம், அதோடு கூட மரணத்தின்போது என்ன சம்பவிக்கிறது என்பதை குறித்த மெய்யான காட்சியையும் கண்டு கொள்கிறோம்.**

"அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி.9:27).

"எல்லாம் ஒரே இடத்துக்குப்போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத்திரும்புகிறது" (பிரச.3:20).

"இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத்திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை" (பிரச.12:7).

சரீரமானது மண்ணுக்குத் திரும்புகிறது என்பது சகல மனுஷருக்கும் வெளியரங்கமாயிருக்கிறது. ஒரு மனுஷனுடைய ஜீவனுள்ள ஆவியானது, அவனுடைய மரண நேரத்தில் அவனுடைய சரீரத்தை விட்டு நீங்குகிறது என்பதும் சமமாக வெளியரங்கமாயிருக்கிறது. ஆனால் மனுஷன் என்ன ஆகிறான், அவனுடைய சரீரமரணத்திற்கு பின் அவனுடைய ஆவி எவ்வாறு ஜீவிக்கிறது இந்த ஜீவியத்தில் அவன் வாழ்ந்த விதத்திற்கு தக்கதாக அவன் என்ன பலனை அல்லது தண்டனையை பெற்றுக்கொள்கிறான் - இந்த கேள்விகளுக்கான பதில்கள் பல மாறுபட்ட நம்பிக்கைகளை கொண்டுவருகின்றன.



அசுத்த பாஷைகளை பேசுகிறவைகளாகவும், ஒழுக்கக்கேடானவைகளாகவும் இப்படியாக இன்னும் பல தீமைகள் நிறைந்ததாக இருக்கிறது. தொலைக்காட்சியும் அல்லது ரேடியோவும் மிக பெரிய பொழுதுபோக்கை ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்குள்ளாக கொண்டுசெல்கிறது. ஆனால் இவைகள் அதிகமாக நடைபெறுகிறது விளையாட்டு, சிறு பயணம், வாசித்தல் நீண்ட நடைபயணம், சிறு பொழுது போக்கு சம்பவங்கள். இதிலே ஒருவர் தன்னுடைய நேரத்தை கழிப்பது பற்றி என்ன?

குழந்தைகள் வளர்ந்து வரும்போது அவர்கள் அதிகமான விளையாட்டுக்களை விளையாடுகிறார்கள் என்பதை நாம் அறிகிறோம். இது எதிர்பார்க்கப்பட்டது. அதே நேரத்தில் முதியவர்களாயிருக்கையில் நாம் அதிகமான வேலைகளை நாமே செய்து நமக்கு வேதனையை உருவாக்கிக்கொள்கிறோம். ஏன் சில நேரங்களை நாம் பொழுது போக்கு என்று மாற்றியமைக்கக்கூடாது என்று நினைக்கிறோம். நாம் குழந்தைகளாகவே இருக்க முடியாது. ஆனால் சில நேரங்களில் நாம் விளையாடவேண்டியவர்களாயிருக்கிறோம். நம்முடைய விளையாட்டு அதிகமான வளர்ச்சியுடையதாக இருக்கவேண்டும். சரீரத்தினின்று அல்லது மனதளவில் ஆனால் இன்னும் இவைகள் விளையாட்டுகள்தான். நான் சொல்லுகிறது: "எந்த விளையாட்டும் ஒருவரை சோம்பேறியாக்காது அவனை எல்லா வேலையையும் செய்யப்பண்ணும்" என்ற ஒரு பழமொழியுண்டு.

பொழுது போக்கு அம்சங்களை கருதுகையில்; அதில் நாம் பங்குகொள்ளவேண்டும், நாம் பல கேள்விகளையும் கேட்க வேண்டும்.

1. இது நல்லதும் மகிழ்ச்சியையும் தருகிறதா? நான் செய்யக்கூடிய இவைகளில் சில வெட்கம் அடையாதவை உண்டா? நான் இத்தோடு கூட மற்றவற்றில் பங்குபெறலாமா? அதை நான் என் நண்பர்களுக்கு சிபாரிசு செய்யலாமா? நான் இந்த கேள்விக்கு இல்லை என்ற பதிலை சொல்வேனானால் அதன்பின் இதை குறித்து நான் எண்ணிகூட பார்க்கக்கூடாது. மற்றவர்கள் இதை செய்துகொண்டிருக்கலாம் ஆனால் நான் அதை செய்கிறேன் என்று அர்த்தமல்ல.

2. நான் இதை அனுபவிக்கிறேனா? நான் இப்படிப்பட்ட பொழுது போக்கை சின்ன காரியங்களுக்காக நான் அனுபவித்துக்கொண்டிருக்கிறேனா? இது கடினமான வேலையாக இருந்துகொண்டிருக்குமானால் சிலவற்றை உண்மையாகவே நான் செய்யவிரும்பவில்லை. நான் ஏன் அதனால் கஷ்டப்படவேண்டும்? நான் சிலவற்றை என் நேரத்தை வீணாக்காமலே செய்ய விரும்ப வில்லை என சொல்வதற்கு அதிக அதிகமான பொழுதுபோக்குகள் உள்ளன.

3. என்னால் இதற்காக அதிகம் செலவழிக்கமுடியுமா? பல விதமான பொழுதுபோக்கு மிகுந்த செலவுமிக்கதாக இருக்கிறது. இருந்தபோதும் நான் ஒரு சில காரியங்களை அனுபவிக்க விரும்புகிறேன். இது எப்பொழுதாவது அதிக செலவு டையதாகவும் இருக்கும். இது ஆபத்தானதா? பல வகையான பொழுதுபோக்குகள் மிக ஆபத்தானது. அவைகள் சருக்கு விளையாட்டு, பந்தையங்கள் மற்றும் கால்கள் கைகள் உடம்பின் மற்ற பாகங்களை உடைக்கக்கூடிய விளையாட்டுக்கள். மேலும் விளையாட தடையை கொண்டுவரும். மாரடைப்பு அல்லது சரீர பிரச்சனைகளைக் கொண்டுவரும், மனோ வேதனையைக் கொண்டுவரும்.

5. இது எனக்கு பயனுள்ளதாயிருக்குமா? இந்த விளையாட்டு அமைப்பில் இருந்தால் என்னுடைய உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கக்கூடிய சில சரீர பயிற்சிகளை கொடுக்கும் என்று அர்த்தமாகிறது. இது நிச்சயமாக கிரிக்கெட்டு, ஒரு பந்துகூட என்னுடைய காலில் படாமல் விளையாடுதல். குழியில் பந்தைத் தள்ளிவிடும் விளையாட்டு டேபிள் டென்னிஸ், பூப்பந்தாட்டம் அல்லது மற்றவைகள் மீன்பிடித்தல், ஓடுதல், வெளியூர் செல்லுதல் அல்லது வீட்டை சுற்றிலும் தங்கி ஓய்வுவெடுத்தல் போன்றவைகளாக இருந்திருக்க முடியும். ஒருவர் தானாக செய்தாலும் குழுவாக செய்தாலும் இதுவாகத்தானிருக்கும். இது குடும்பத்தில் ஓய்வு எடுக்கப்பண்ணும். இது எப்படியிருந்தாலும் அல்லது யார் இதில் கலந்து கொண்டாலும், இது ஒருவருக்கு நிதானத்தை ஏற்படுத்தவேண்டும். சில இளைப்பாறுதலை ஏற்படுத்தவேண்டும். சரீர அளவின்படியும் மனதளவின்படியும் ஒருவரை பெலப்படுத்தவேண்டும்.

நாம் மற்ற கேள்விக்கு தொடர்ந்து செல்கிறேன். ஆனால் எனக்கு உதவி செய்யக்கூடிய அல்லது உங்களுக்கு உதவிசெய்யக்கூடிய சில கேள்விகள்தான் அவைகள். இந்த பொழுதுபோக்கு அல்லது கேளிக்கை இது சிறப்பான, பிரயோஜனமுள்ளதாக இருக்கவேண்டும் என தீர்மானிக்கவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு கிறிஸ்தவன் என உணர்ந்து எதை செய்யவேண்டுமோ அதைமட்டும் செய்து தனிப்பட்ட வாழ்க்கையிலும் தன்னுடைய வேலையிலும், ஓய்வுநாளிலும் கிறிஸ்தவ கொள்கைகளில் நிலைத்திருக்க வேண்டும். வீட்டில் பயிற்சி பண்ணுவதற்கும், வேறுஇடத்தில் நடந்துகொள்ளுவதற்கும் நான் அறியாத மற்ற இஷ்டமான கேள்விக்குரிய செயல்களில் ஈடுபடுவதும் தவறுமட்டுமல்ல, அது ஒரு மாய்மாலமானதாக இருக்கக்கூடியது.

இந்த பொழுதுபோக்கு, கேளிக்கை பற்றி நினைக்கும்போது நாம் நம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டிய சில கொள்கைகள் வேதாகமத்தில் உள்ளன. எடுத்துக்காட்டாக பவுல் எழுதினார். "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள்" என்று (ரோமர் 12:9).மறுபடியும் சொன்னார் "நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு" என்று (ரோமர் 12:21). ஒருவன் என்னசெய்தாலும் அவன் சில கெட்ட காரியங்களுக்குள் சிக்கிக்கொள்ள உற்சாகப்படுத்தப்படுகிறான். அவன் விளையாட்டில் விருப்பங்கொண்டால் அந்த விளையாட்டின் மூலம் சூதாட்டத்தில் ஈடுபடக்கூடும். ஒரு நல்ல சினிமா காட்சிகளைக் கண்டு அனுபவித்தால், அங்கே சென்று மோசமான காரியங்களை பார்ப்பதில் உற்சாகப்படுத்தபடுவான். ஆனால் நாம் இப்படிப்பட்ட கெட்ட காரியங்களை வெறுத்து, நல்ல காரியங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும் என பவுல் கூறினார். நாம் நல்ல காரிங்களைச் செய்வோமானால் சில நல்ல காரியங்களும் நல் நடத்தைக்கும் தேக ஆரோக்கியத்திற்கும் உகந்ததாக எப்போதும் இருக்கும். உலகம் கெட்ட மற்றும் தவறான காரியங்களை அனுபவிப்பதே நல்ல நேரமாக இருக்க முடியுமெனவும் அந்த காரிங்கள் துஷ்டசுபாவமும் வினாஎழுப்பப்கூடியதாகவும் இருக்கிறது. இது நிச்சயமாக ஒவ்வொன்றும் உண்மை என நினைக்கின்றது. எப்படியோ ஒருவர் இப்படிப்பட்ட உலகக் காரியங்களைக் கவனிக்க



கொடுக்கும். ஆனால் நமக்கு ஒரு நம்பிக்கையுண்டு, ஏனென்றால் சத்தியம் நம்மை இவையெல்லாவற்றினின்றும் விடுதலையாக்கும்.

சத்தியம் இவ்வகை அநீதியான நடக்கையிலிருந்து மட்டும் விடுதலையாக்குவதில்லை. ஆனால் நம்மை தவறான மத பழக்க வழக்கங்களிலிருந்தும், மனித பாரம்பரியத்திலிருந்தும் விடுதலையாக்குகிறது. முதல் நூற்றாண்டில் அநேகர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மார்க்க பாரம்பரியங்களுக்கும் கற்பனைகளுக்கும் அடிமைப்பட்டிருந்தார்கள் என்று மத்தேயு 23:1-33 மற்றும் மாற்கு 7:1-13-ல் வாசித்து அறிந்து கொள்ளலாம். இன்றும் கூட மக்கள் பலவித மார்க்கக் கோட்பாடுகளுக்கு, பாரம்பரியங்களுக்கு, வழிபாடுகளுக்கும் அடிமைகளாகயிருக்கின்றனர். இவ்வகையான எந்த பழக்க வழக்கங்களும் வேதாகமத்தில் குறிப்பிடவுமில்லை, தேவனால் அங்கிகரிக்கப்படவுமில்லை. மத்தேயு 15:9-ல் இயேசு பரிசேயருடைய உபதேசங்களைக் குறித்து, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறீர்கள்" என்றார்.

நாம் எப்படியிருக்கிறோம்? இவ்விதமான மத பாரம்பரியங்களும், மனிதக் கோட்பாடுகளும் நம்மை அடிமைப்படுத்தியிருக்கிறதா? தேவன் ஒருபோதும் நீங்கள் செய்யும்படி கேட்காத மனித போதனைகள், கற்பனைகளுக்கும் அடிமையாயிருக்கிறீர்களா? நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு ஏனென்றால் சத்தியம் நம்மை இவ்வகையான கட்டுகளிலிருந்து விடுதலையாக்கும்.

சாத்தான் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் (யோவா.8:44) ஆனால் சத்தியத்தோடுகூட நம்பட்சத்தில் சர்வத்தையும் ஆளுகிற இயேசு நமக்குத் தலைவராகவும் கர்த்தாதி கர்த்தராகவுமிருக்கிறார். இயேசுவும் அவருடைய வார்த்தையும் நம்மை விடுதலையாக்கும்.

**மூன்றாவது,** நாம் சத்தியத்தை அறிந்து கொள்வது மாத்திரமல்ல மேலும் சத்தியம் நம்மை விடுதலையாக்குவது மட்டுமல்ல, ஆனால் நாம் அனைவரும் அந்த சத்தியம் இயேசுவுக்குள் காணப்படுகிறது என்பதையும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்றார்.

நாம் சத்தியத்தைத் தேடுவோமானால், இயேசுவே சத்தியமானால் பிறகு அந்த சத்தியத்தைக் கண்டு இயேசுவினிடத்திற்குச் செல்லவேண்டும். இயேசு

"...நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றான்" இவ்வார்த்தைகள் நம்மை விடுதலையாக்கும் கர்த்தருடைய வார்த்தைகள். ஆனபடியால் சத்தியம் என்பது விலையேறபெற்ற ஒன்று. சத்தியம் மிகவும் முக்கியமான ஒன்றாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1பேது.1;22 ஐ வாசிக்கையில் சத்தியம் நம் ஆத்துமாக்களை சுத்தமாக்குகிறது என அறிந்து கொள்கிறோம். மேலும் 2தெச.1:7-9 ஐ வாசிக்கையில் நித்திய ஆக்கினைக்கு நாம் நீங்க வேண்டுமென கற்றுக் கொள்கிறோம். நாம் அனைவரும் நம்முடைய உண்மை, நேர்மையின்படியல்ல சத்தியத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம்.

அன்பு சகோதரிகளே, சத்தியத்தை அறிவோம், சத்தியம் நம்மை விடுதலையாக்கும், நம்மை மாத்திரமல்ல சத்தியத்தை அறியாமல் அன்றாடம் மாண்டுகொண்டிருக்கிற மற்றவர்களையும் சத்தியம் விடுதலையாக்கும்படி சத்தியத்தை அறிவிப்போம். கர்த்தர் நம் முயற்சிகளை ஆசீர்வதிப்பாராக!

# சத்தியத்தைப்பற்றி... - About the Truth... - Glory Arjunan

பெண்கள் பகுதி

அன்பான சகோதரிகளே, சத்தியபரராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துகள் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்களும், வருடங்களும் நெய்கிறவனின் நாடாவைப் போல் கடந்தோடுகின்றன. என்ன ஆச்சரியம்! 2017-ம் ஆண்டு நேற்று துவங்கியது போல் உள்ள நிலையில் 2018-ம் ஆண்டு துவங்கிவிட்டது. கடந்த நாட்களில் கண்மணியைப் போலக் காத்த தேவன் இப்புத்தாண்டிலும் காத்து வழிநடத்துவாராக!

உயிரோடும், சுகத்தோடும் இருக்கிற நாம் ஒவ்வொரு நாளும் மரித்துக் கொண்டிருக்கிற ஆத்துமாக்களை சற்றே நினைத்துப் பார்ப்போம். கூடுமானால் அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களை நித்திய ஜீவனுக்கென்று ஆதாயப்படுத்துவோம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானமுள்ளவன் என வேதம் கூறுகிறது. இவ்வுலகில் ஒவ்வொரு நிமிடமும் 107 பேர் மரிக்கின்றனர், ஒரு நாளில் 1,53,000 மனிதர்கள் மரிக்கின்றனர் என ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. எனவே அசதியாயிராமல் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை மரித்துக்கொண்டிருக்கிற மற்றும் தங்கள் ஆத்மாக்களை இழந்து ஆக்கினையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற சகோதரிகளுக்குக் கூறுவோம்.

ஏனென்றால் இயேசு "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). இவைகள் வல்லமையான வார்த்தைகள். அநேகருக்கு சத்தியம் என்றால் என்னவென்றே தெரியாது. பலர் பல்வேறு கருத்துக்களைக் கூறுவர். ஆனால் சத்தியம் என்பது சத்தியமே!

இங்கு இயேசு, **முதலாவது** நாம் சத்தியத்தை அறிந்து கொள்ளவேண்டும் என போதித்தார். சத்தியம் நிலைத்திருக்கிறது, அது உண்மையானது. இயேசு இவ்வார்த்தைகளை யாரிடம் கூறினார்? தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கிக் கூறினார். அதற்கு யூதர்கள் "...அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் அடிமைகளாயிருக்கவில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்" (யோவா.8:31,33). நாமும் இவ்வாறே நாங்கள் கிறிஸ்தவர்கள் தான், எங்களுக்கு சத்தியம் என்றால் என்னவென்று தெரியும், நாங்கள் எதற்கும் அடிமைகளல்ல, யாருக்கும் அடிமைகளல்ல என்று நினைக்கலாம். பிரியமானவர்களே நாம் சத்தியத்தை வெறுமனே விசுவாசிக்கலாம். உண்மையாக நடக்கிறேன் என்று கூறலாம். ஆனால் சத்தியம் என்பது என்றென்றும் நிலைத்திருக்கிற ஒன்றாகும்.

**இரண்டாவது,** நாம்சத்தியம் என்பது என்னவென்று அறிந்து கொள்வதுமட்டுமல்ல, ஆனால் சத்தியம் நம்மை விடுதலையாக்குகிறது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். சத்தியமானது நம்மை பாவக்கட்டிலிருந்து விடுதலையாக்குகிறது. இயேசு, "...பாவஞ்செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான்..." (யோவா.8:34) என்று சொன்னார். ஒருவேளை நீங்கள் விசுவாசிகளாயிருந்த போதிலும் ஏதேனும் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறீர்களா? பணத்திற்கு, சொத்து சுகங்களுக்கு, பொன் பொருளுக்கு அடிமைகளா? உங்கள் கணவரோடு தேவன் விரும்புகிறபடி நல்லுறவு கொண்டிருக்கிறீர்களா அல்லது ஓயாது சண்டையிடுகிறீர்களா? அவருக்குச் செய்ய வேண்டிய உங்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கை கசப்பு கோபம், காரணமில்லாத வெறுப்பு, பொறாமையினால் நிறைந்துள்ளதா? அப்படியானால் அவைகள் நமக்கு மிகுந்த பாரத்தைக்



சோதிக்கப்பட்டுவிட்டால், அதன்பின் அவன் இந்த சோதனைகளை மேற்கொள்ள கர்த்தர் அவனுக்கு எப்போதும் உதவி செய்ய இருக்கிறார் என நினைக்கவேண்டும். எபிரெய ஆசான் கிறிஸ்துவைப் பற்றி பேசுகையில் நினைப்பூட்டுகிறார் "ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினால், அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி.2:18). பவுல் எழுதினார், "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1கொரி.10:13).

நான் துரிதமாய் சொல்லட்டும் கிறிஸ்தவன் சந்தோஷமாக இருப்பதில் அல்லது பொழுது போக்குகளில் பங்குகொள்வது, தனக்குள்ளாக தவறானவற்றை அனுமதிக்காமலும், இது அளவுக்கு அதிகமாக தன்னை கொண்டு செல்லாமல் இருப்பதும் ஒரு தவறில்லை. சில நேரங்களில் உலக ஜனங்கள், கிறிஸ்தவன் எப்போதும் ஆழ்ந்த யோசனையில், துயரத்தில் மேலும் சந்தோஷமில்லாமலும் கூட இருக்கின்றனர் என நினைக்கின்றனர். அவர்கள் இது கெட்டதும் தவறானதும் சந்தோஷத்திற்கான அடையாளங்களை காண்பிக்காததுமாகவும் கூட கிறிஸ்தவர்களுக்கு இருப்பதாக எண்ணுகின்றனர். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றகிறவர்களைப் பற்றி வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதற்கு இது மிகவும் முரணானது. கிறிஸ்தவர்கள் சந்தோஷமாக இருக்கவேண்டிய ஜனங்கள். அவர்கள் சந்தோஷமாக இருக்கவும் வாழ்க்கையின் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் ஒவ்வொரு காரணங்களைக் கொண்டுள்ளனர். இது அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிலவற்றை ஏற்றுக்கொள்ளவும், சிலவற்றை ஒதுக்கிடவும் வேண்டியவர்கள் என்பது உண்மை. ஆனால் கெட்டதும் தவறானதும் மற்றும் எதுவெல்லாம் மாரடைப்பும் வேதனையையும் கொண்டுவருகின்றனவோ அவைகளை ஒதுக்கிவிட வேண்டியவர்கள் என்பதும் உண்மை. கிறிஸ்தவர்கள் உண்மையான சந்தோஷத்தைக் கொண்டுவருகிற இந்தக் காரியங்களில் பங்குகொள்ளுகின்றனர்.

கடைசியாக பேதுரு தன் காலத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு "மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசி நேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர் களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடையசெவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்? நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால்

பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து; கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" (1பேதுரு 3:8-17).

தயவு செய்து இக்காரியங்களை நினைத்துப்பாருங்கள். மேலும் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லாவிட்டால் நாங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாற வேண்டுமென உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம். நாங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்தில் முழுமையடைந்தவர்களாக கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். கிறிஸ்துவைப் பின்பற்றுவதின் மூலம் வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாத சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் கண்டு கொள்கிறோம். நீங்கள்கூட ஒரு கிறிஸ்தவனாக மாறலாம். இதையெல்லாம் நீங்கள் செய்ய தேவனிடத்தில் விசுவாசம் வைக்கவும், உன்னை இரட்சிக்கும்படி உனக்காக மரித்த தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைக்கவும் உன் பாவங்களுக்காக மனந்திரும்பி அல்லது இனி ஒருபோதும் பாவங்களில் நிலைத்திராதபடி அவைகளிலிருந்து திரும்பி, ஒருவர் அல்லது பலருக்கு முன் உன் வாயினால் இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உன் பாவங்கள் கழுவப்படும்படி நீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். இதைச் செய்வீர்களென்றால் கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். இவ்வாறாக பிறகு நீங்கள் தேவனுடைய பிள்ளையாக ஒரு கிறிஸ்தவனாக, தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களுடன் இருப்பீர்கள். மேலும் மரணபரியந்தம் அவரிடத்தில் விசுவாசம் வைத்தால் அதன்பின் ஒரு நாள் அவர் உங்களை பரலோகத்திற்கு என்றென்றும் தம்மோடு கூட வாழும்படி எடுத்துக்கொள்வார். நீங்கள் இதைச் செய்ய விருப்பம் கொள்ள வேண்டுமென உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். நீங்கள் கர்த்தருக்கு உங்களுடைய கீழ்ப்படிதலில் நாங்கள் உங்களுக்கு உதவ வேண்டுமானால், நீங்கள் அதிகம் படித்துக்கொள்ளவும் ஏதேனும் கேள்வி எழும்புமானால் அதற்கு விடையை அறிந்துகொள்ளவும் உங்களுக்குப் புத்தகங்களை அனுப்ப விரும்புகிறோம். உங்களது விருப்பத்தினைத் தெரியப்படுத்தவும்.

**ஜெபியுங்கள்**

- ▸▸ புதிய வருடத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்...
- ▸▸ இந்தியாவில் சுவிசேஷம் எல்லோருக்கும் அறிவிக்கப்பட...
- ▸▸ கிரமத்திற்கு ஒரு கர்த்தருடைய சபை எழும்பு...
- ▸▸ நமது மாத இதழ் இல்லந்தோறும் இருக்க...
- ▸▸ இவ்வருட ஊழியங்களுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"

யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041



## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends

-TVOTI



**நமது நண்பர்களுக்கான ஒரே செய்தி இயேசுவே**

**பாடம் -4**

**Jesus is the Message to our Friends**

**மனப்பாட வசனம்:**

1தீமோத்தேயு 3:15 **(NKJV)** "தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"

ஒரு பாலம் ஒரு பக்கத்து நிலப்பகுதியை இன்னொரு பகுதியோடு இணைக்கிறது. மிக முக்கியமான பாலங்களில் ஒன்றான கலிஃபோர்னியாவில் கோல்டன் கேட் பாலம் சான் பிரான்சிஸ்கோ நகரை சான்பிரான்சிஸ்கோவைக் கடக்கும் விரிகுடாவை மாரின் நாட்டுடன் இணைக்கிறது. இந்த பாலம் பயணிகள் குறிப்பிட்டஇடத்திற்குச் செல்ல உதவுகிறது, இது இல்லையெனில் பயணிகள் தங்கள் இடத்திற்கு போய்ச்சேர பலமணி நேரம் எடுக்கும். எல்லா பாலங்களும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல சுலபமான வழியை ஏற்படுத்துகிறது, இது குறிப்பிட்ட இடத்திற்கு விரைவாகச் செல்லக்கூடிய வழியையும் ஏற்படுத்துகிறது அத்தோடு வெளிப்படையாக பிரிக்கின்ற பகுதிகளை சென்றடைய நமக்கு உதவியாகயிருக்கிறது. பாலம் என்பது கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் ஜனங்களை ஒருவரோடொருவர் இணைக்கிற ஒன்றாக நான் நம்புகிறேன். இவைகள் எளிதாக இணைப்பதற்கான பெரிய கருவிகளாக இருக்கின்றன.

கிறிஸ்தவர்கள் பாவத்தில் இழந்துபோனவர்களுக்கான பாலங்களாக இருக்கின்றனர். இவர்களுடைய வார்த்தைகள் மாதிரியான ஜீவியங்கள், தேவனைப்பற்றிய மனப்பாங்கு மற்றும் வேதாகம நடக்கைகள் மூலம் பிறர் சத்தியத்தைக் கற்றுக் கொள்ள இவர்கள் உதவுகின்றவர்களாக இருக்கின்றனர்.

இன்று தேவன் தம்முடைய பணியை தம்முடைய சபையின் கரங்களில் விட்டுச் சென்றுள்ளார், "ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1தீமோ.3;15). பவுல் 2கொரிந்தியர்3:2ல், "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள் தானே" என்று எழுதினான். ஆனி ஜான்சன் ஃபிலின்ட் எழுதிய "உலக வேதாகமம்" ல் அவள் பாடல் வடியில் இந்த உணர்வுமிக்க கருத்தினை வெளிப்படுத்துகிறாள்.

கிறிஸ்து கரங்களை கொண்டிரவில்லை ஆனால்
நமது கரங்கள்
அவரது பணியை செய்யவுள்ளன இன்று
அவர் பாதங்களைக் கொண்டிரவில்லை ஆனால்
நமது பாதங்கள்
அவரது வழியில் மனிதனை நடத்தவுள்ளது.
அவர் நாவை கொண்டிரவில்லை ஆனால்
நமது நாவு
அவர் எவ்வாறு மரித்தாரென மனிதனிடம் சொல்லவுள்ளது
அவர் உதவியற்றவர் ஆனால் நமது உதவி
அவரண்டை அவர்களை வழி நடத்தவுள்ளது